ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642.

# திராவிடநாடு

மலர் 11. | 14—9—52 | இதழ் 11

# உத்தமர் உதவி

# ||| "நிபந்தனை"-பரிசு!

★

கிருஷ்ணராவ்
போதுச் செயலாளர்
பஞ்சநிவாரண கூட்டுக்கமிட்டி
ஆந்திரமாகாணம்

பட்டினியால் வாடும் ஆந்திர மாகாணத்தவருக்கு உணவுப் பொருள் உதவி கோரி, ரஷ்ய தொழிற்சங்க மத்திய கவுன்சிலுக்குத் தாங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது.

சென்னை மாகாணப் பாட்டாளி மக்களுக்கும் ஆந்திர மாகாணத் தொழிலாளருக்கும் ஏற்பட்டுள்ள இந்தப் பரிதாப நிலை குறித்து, நாங்கள், எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதன் காரணமாக 10,000-டன் கோதுமையும், 5,000-டன் அரிசியையும், 500.000 டப்பா புட்டிப் பாலும் தங்கள் கூட்டுக் கமிட்டிக்கு அனுப்புகிறோம் இதைத்தவிர, பட்டினி கிடப்போருக்கு உதவ, இந்திய ரூபாய் மதிப்பில் 250,000-த்தையும், ரஷ்ய தொழிற் சங்கங்கள், ஒதுக்கியுள்ளன.

பட்டினியால் வாடும் இலட்சோப லட்சம் மனித உயிர்களைக் காப்பாற்றும் முயற்சியில், கூட்டுக் கமிட்டி வெற்றிகாண வேண்டுமென விரும்புகிறோம்.

இப்படிக்கு
வி. குஸ்னெட்ஸாவ்
ரஷ்ய தொழிற் சங்க
மத்திய கவுன்சில்.

*

இவ்விதம், ரஷ்யத் தொழிற் சங்க சகோதரர்கள், கடிதம் ஒன்றை, அனுப்பியுள்ளனர். அதையொட்டி காரகந்தா எனும் ரஷ்யக் கப்பல் ஆந்திரநாட்டுப் பஞ்சநிவாரண உதவிக்கான கோதுமையை ஏற்றிக்கொண்டு ஓடெஸ்ஸா துறைமுகத்தை விட்டு சென்னைக்குப் புறப்பட்டு விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. உஷாகோவ் எனும் மற்றோர் கப்பலும் சென்னைக்குப் புறப்பட, ரஷ்யத் துறைமுகத்தில் தயாராகிக் கொண்டிருக்கிறதாம்.

இந்த மனிதாபிமானமுள்ள நன்கொடையைக் காண எவரும், மகிழ்வர். எவ்வித நிபந்தனையுமின்றி, இவ்வளவு பெரிய நன்கொடையை ஏழையுலகுக்கு வழங்கவந்த சோவியத் தொழிலாளர்களின் அன்புக்கு, எவரும் வாழ்த்துக் கூறுவர். மலரும் சகோதரபாசம் கண்டு மகிழ்ச்சி அடைவர்.

ரஷ்ய பூமியிலிருந்து மட்டுமல்ல, சீன நாட்டின் தொழிற்சங்கங்களிடமிருந்தும், தென்னாட்டுத் தோழர்களின் துயர் துடைப்பதற்காக, நான்கு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள், அனுப்பப்பட்டுள்ளன.

இந்த அன்புக் கொடைகளை, அனுதாபமாக நிற்கும் நமது மக்கள் ஆவலோடு வரவேற்பர். சென்னை மாநிலம், உணவு விஷயத்தில் படும் பாட்டை இன்னதென்று சொல்ல முடியாது! அதிலும், அன்பர் ஆச்சாரியார் அவர்களின் 'அதிவிவேக' முடிவின் காரணமாக, வளர்ந்திருக்கும், வேதனைகள் கொஞ்சநஞ்சமல்ல.

'ரேஷன்' ரத்து செய்யப்பட்டதன் விளைவாக, நிலைமை படுமோசமாகி யிருக்கிறது. பூஞ்சோலைகளிலும் பாலைவனக் காட்சிகள்! தினசரி இதழ்களைப் பார்த்தால் முன்னைவிட, கோரமான செய்திகளைக் காண்கிறோம்.

பட்டுக்கோட்டை பஞ்சப் பிரதேசம்.

வட ஆற்காடு பஞ்சப் பிரதேசம்.

என்று, மாநிலத்தின் பற்பலப் பகுதிகள், பஞ்சப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுக் கொண்டுள்ளன.

ராயலசீமையில் 13-பேர் மரணம்

ராணிப்பேட்டையில் இருவர்

இவ்விதம் வரும் தகவல்களும், கடந்த கால ஆட்சியைவிட அதிகமாகிக் கொண்டே உள்ளன. இது சாதாரணமான சங்கதியா! 'மகான் வந்தார்! மழை பெய்தது!!' என்று, ஆச்சாரியார் குறித்து, துதிபாடும் திருக்கூட்டம் இருக்கிறதே யொழிய, அவரது வருகைக்குப் பின் வளர்ந்திருக்கும் நிலைமை சாதாரணமானதல்ல. இந்த விஷயத்தில் ஆச்சாரியாரின் 'நல்லெண்ணத்தின்'மீது சந்தேகம் கொள்ளவில்லை. 'மக்கள் மாளவேண்டும் — அந்தக் காட்சியைக் கண்டு நாம் மகிழ வேண்டும்' என்கிற, கொடூர சிந்தை கொண்டவர் என, நாம் கூறமாட்டோம். ஆனால், அவர்மேற்கொண்ட நடவடிக்கைகள் உள்ளனவே, அவை, நிலைமையை, சீர்செய்யவில்லை. காரணம், நாட்டைப்பார்த்து நல்லது செய்யவேண்டும் என்று நன்னோக்கம் கொள்வதற்குப் பதில், வெறும் போதனைகளால், காரியங்களைச் சாதிக்கலாம் எனக் கருதினார். பக்திப் போதையை மக்களுக்கு ஊட்டி, இந்தப் பரிதாபங்களைக் குறைக்கலாமெனும் தப்புக் கணக்குப் போட்டார்! கேபான் மத குரு உருவில், அலறும் மக்களை ஆண்டவன்மீது பாரத்தைப் போடச் சொன்னார். புலிகளை அழைத்து, 'புத்திசாலிகள்' ஆகும்படி போதித்தார். புலி, பசுவாகாது என்றோம்! ஆச்சாரியார் போல வயதானவர்கூட நம்மீது சீறினர்—ஆச்சாரியாரை ஆதரித்தனர். பலன்! பஞ்சம்—பட்டினி—பிணங்கள்.

இந்த ஆபத்தான சூழ்நிலை, அதிவேகமாக வளர்ந்துகொண்டிருப்பதைக் கேட்டு திகில் கொண்டிருக்கும் நமக்கு, சீனத் தோழர்களும், ரஷ்யப் பாட்டாளிகளும் திரட்டியனுப்பும் உதவியைக் காணும் போது, நெஞ்சம்மகிழவே செய்யும்.

சாவுக் கடலில் மிதப்பவனுக்கு உதவி கிடைத்தால், உதறியா தள்ளுவான்? — கசடனும் செய்யான்! காப்பாற்ற வந்தவனுக்கு, கோடானு கோடி, கும்பிடு போட்டுவிட்டு, குதூகலம் அடைவான்.

பொதுவுடைமைச் சோலைகளிருந்து வந்த ஆதரவு நன்கொடைகளைக் கண்ட நாம் அவ்வண்ணமே மகிழ்ந்தோம்.

ஆந்திர மக்களின் அவதி குறையுமென நம்பினோம்.

ராயலசீமையின் பரிதாபம் ஓரளவு அடங்குமென எதிர்பார்த்தோம்.

திருவாங்கூர் — கொச்சியின், திண்டாட்டம் அடங்கலாமென ஆசை வைத்தோம்.

ஆனால், நமது மாட்சிமை தங்கிய டில்லியம்பதி, இந்த அளவு 'இன்பத்தையும்' நமக்குத் தர விரும்பவில்லை. வந்த உதவிகளை உதறியிருக்கிறது! சீனச் சோதரர்கள் அனுப்பிய நான்கு லட்ச ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருள்களை, திருப்பி விட்டுவிட்டதாம். சாகிறோம், நாம்! வந்த சாப்பாட்டையும் தூக்கியெறிகிறது டில்லி!!

"தனிப்பட்ட நிவாரண கமிட்டிகளுக்கு மேற்படி நன்கொடைகள் அனுப்பப்பட்டுள்ளன. அது, தகராறுகளை உண்டுபண்ணும்"

என்று, காரணம் எழுதி, மேற்படி உதவிகளை, உதறி, நிபந்தனை போட்டிருக்கிறது. வந்த நன்கொடையையும் சீனத் தோழர்களுக்கு திருப்பியனுப்பியிருக்கிறது! ரஷ்யாவுக்கும் நிபந்தனை அனுப்பப்பட்டு விட்டதாம்!!

என்ன நிபந்தனை தெரியுமா?

"இப்படிப்பட்ட நன்கொடைகளை சர்க்கார் ஸ்தாபனங்கள் மூலம் தான் விநியோகிக்க வேண்டும். அல்லது செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். அப்படி யில்லாமல் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிப்பது சர்க்கார் நிவாரண திட்டங்களை சரிவர நடக்காமற் செய்துவிடும்"

சர்க்காருடைய நிவாரணத் திட்டம் இவ்வித நன்கொடைகளால் பாதிக்கப்படுமாம். கூறுகிறது, டில்லி சர்க்கார்! அழும் ஏழைக்கு, அடுத்த வீட்டுக்கார அன்னம்மா, சோறு தரவர, "யாரடி! உன் சோற்றை நீயோ கொடுப்பது? கொடு என்னிடம். நானல்லவா தர வேண்டும்" என்று எதிர்வீட்டுக்காரி சண்டைக்குப் போன கதை போலிருக்கிறது, இக் காட்சி!

உதவி கேட்டது — ஆந்திர நிவாரணக் கமிட்டி.

அனுப்பியது—ரஷ்யாவும் சீனாவும்.

எப்படி அனுப்பினாய்?—கேட்கிறது, டில்லி.

இந்தவிசித்திரத்தை என்னவென்று சொல்வது! மக்கள் படும் அவதியைக் காணச் சகிக்காததால் தோழர் கிருஷ்ணராவ், கடிதம் எழுதி வேண்டினார். வேண்டுதலை, சோவியத் சர்க்கார் அல்ல! — சோவியத் மக்கள்!! ஏற்றுக்கொண்டு, தமது சர்க்காரின் ஆசியோடு, சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள். இது கூடாதாம்! தன்னுடைய கவுரவம் போகிறதென்று முழக்குகிறது, டில்லி.

மக்கள் மாண்டுகொண்டிருப்பதைக் கண்டு துடிக்காத உள்ளம், இந்த நன்கொடைகளைக் கண்டதும் துடிக்கிறதாம்.

விவேகம் இருந்திருந்தால் ஆந்திரக் கமிட்டியினர், எழுது முன்பு, டில்லி சர்க்காரே எழுதியல்லவோ, உதவி கேட்டிருக்க வேண்டும்.

மக்களைக் காப்பதாகக் கூறும் சர்க்கார் மதோன்மத்த நிலையில் இருந்ததால் தானே, தனிப்பட்ட கமிட்டி, எழுதவேண்டியதாயிற்று? உதவிகளைக் கண்டதும் உறுமும், டில்லி, எனிந்த நன்கொடைகளை முன்னரே கேட்டுப் பெற்றிருக்கக் கூடாது? தனிப்பட்ட ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிப்பது தகராறுகளை உண்டாக்குமாம்! வெட்கமின்றி வெளிநாட்டுச் சர்க்காருக்கு, இதை எழுதுகிறது. தனது நாட்டில இயங்கும் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்குமளவு, டில்லி பீடத்துக்கு, திறமையில்லாமலா போய் விட்டது? தேவிகுளத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, அரசியல் கட்சிகளை அடக்கி ஆள, துணிவும் அதிகாரிகளையும் வைத்திருக்கும் ஒரு ஆட்சிக்கு, இந்த நன்கொடைகள் எவ்விதம் விநியோகிக்கப் படுகின்றன என்பதைக் கண் காணிப்பதா, முடியாத காரியம்?

சர்க்காரின் நிவாரணத்திட்டம் இப்படி நன்கொடைகள் அளிப்பதால் பாதிக்கப்படுமாம்! — விசித்திரமான வியாக்யானம். பஞ்சத்

(5-ம் பக்கம் பார்க்க)

## நகரசபைகளில்

★

"காங்கிரஸ்"-தன் கட்சி பெருமால் புகத் துடிக்கிறது.

*

காங்கிரசின் திட்டங்களை அறிவோம்—நாம்.

*

அதற்கு இடமளித்தால்-ஏழைகள் வாழ்வு உயராது—மீளாது.

*

அதன் கோரப் பிடிகளில், மக்கள் சிக்கக்கூடாது.

*

இதை மனதில் வையுங்கள்!
மாட்டுப் பெட்டியில்
ஓட்டுப் போடுங்கள்!!

திராவிடநாடு

காஞ்சி] 14—9—52 [ஞாயிறு

# அறிமுகம்

★

"கதர்க் குல்லாய்! முனை பூஜ்யம்!!— இவ்விதம் இருப்போரல்ல, இப்போது காங்கிரசுக்கு தேவை" என்று, அன்றோர் நாள், ஆசிய ஜோதி முழக்கமிட்டாரல்லவா?

"அதே நிலையில், இதோ ஒரு ஆள், பார்!" என்று அன்பர் ஆச்சாரியார், உங்களுக்கும் உலகுக்கும், ஒரு ஆளை அறிமுகப்படுத்தி வைத்துள்ளார்,

அவர் அறிமுகப்படுத்தும் நபர் ஒரு 'அல்ப சொல்பமல்ல' பண்டிதர் அறியாத உருவமல்ல! பக்கத்திலே அமர்ந்திருக்கும் 'பாக்யம்' பெற்றவர். பலமுறை வெளிநாடுகளில் உலவ அனுப்பி வைக்கப்பட்டவர். இப்போது! மத்ய சர்க்காரிலே மந்திரியாகயிருப்பவர். அத்தகையவரைத்தான், இவ்விதம், அறிமுகம் செய்து வைக்கிறார் அன்பர் ஆச்சாரியார். மந்தமதி! மூளையில்லை—இதுபோலப் பலப்பல வார்த்தைகள் உண்டல்லவா, புத்தியில்லாதவர்களை அழைக்க. அதிலே ஒரு சொல்லை எடுத்து, தனது கருத்தை, நாசுக்காக, சிந்தனைத் திறன் இல்லாதவர் என்று செப்புகிறார்- அதோடு விடவில்லை! அதை விளக்கவும் செய்கிறார். மந்தமதி படைத்தோரின் சுபாவம் என்ன? எதையும் அடிக்கடி நினை விழந்து விடுவதுதானே! 'ஞாபக மறதி' என்பதும், 'மந்தமதி' என்பதும் ஒரே வரிசையில் வரும் வார்த்தைகள் தானே! அதைக் கூறாமல் கூறியுள்ளார், "மத்திய மந்திரியார் தவறான புள்ளி விபரம் தந்துவிட்டார்." தவறு, எப்படி வரும்? மந்த மதியால் தானே! அதையே ஆச்சாரியார் குறிப்பிடுகிறார். அவ்விதம். அவரால், அறிமுகப்படுத்தி வைக்கப்படும் ஆசாமி வேறு யாருமல்ல! தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!! அவரையே, இவ்வித அலங்கார வார்த்தைகள் மூலம், உங்களுக்கும் நமக்கும் காட்டுகிறார். அவர் மீது இவருக்கு இவ்வளவு கோபமும் தாபமும் ஏற்படக் காரணமென்ன வென்பதைத்தான் அறிவோமே, நாம்! கிருஷ்ணமாச்சாரி இவரைப் 'பைத்யம்' என்று அழைக்க, இவர் 'மந்தமதி' யெனும் பட்டத்தைச்சூட்டுகிறார். இருவரும் 'பட்டமளிப்பு' நடத்திக்கொள்ளும் இந்தக் காட்சியைக் காணும்போது, இத்தகையவர்களா நம்மை ஆள்பவர்களாக இருக்கிறார்கள் எனும் வேதனை எழுந்தாலும், இத் தகாரின் விளைவாக, வெளியாகும் உண்மையை நாம் அலட்சியம் செய்துவிட முடியாது. ஆச்சாரியார்,

கைத்தறி நெசவுக்கு வேஷ்டி புடவை முதலிய ரகங்கள் ஒதுக்கி விடவேண்டும் என்றார். அந்த யோசனையை 'பைத்யக்காரத்தனம்' என்று, மறுத்துக் கூறினார், மத்ய சர்க்கார் மந்திரி. அவருக்கு மறுப்புதர வந்த மாகாண முதலமைச்சர், 'சிந்தனைத்திறன் தேவை' என்பதைக் கூறிவிட்டு குறிப்பிடும் போது, "கிருஷ்ணமாச்சாரியின் வார்த்தைகளைக் கேட்டதும் பம்பாயிலும் ஆமதாபாத்திலும் இருக்கும் ஆலையரசர்கள் மகிழ்ந்தார்கள்" என்று தெரிவிக்கிறார். என்ன பொருள் இதற்கு? கைத்தறியைத் தாழ்த்திப் பேசியதும், வடநாட்டு ஆலையரசர்களுக்கு மகிழ்ச்சி வந்ததேன் என்கிற விளக்கம், நாம் அறிவோம். ஆனால், இந்தவிபரத்தை, ஆச்சாரியார் கூறுவதேன்? கிருஷ்ணமாச்சாரியார் அந்த ஆலையரசர்களை மட்டுமின்றி, தனக்கு விருந்து அளித்த ஜவுளி வியாபாரிகளையும், சந்தோஷப்படுத்தும் வகையிலேயே இவ்விதம் பேசினாராம். அப்படியென்றால் என்ன அர்த்தம்? கிருஷ்ணமாச்சாரியார், ஆட்சிக்கு வேண்டிய சிந்தனைத்திறன் இல்லாதவர் மட்டுமல்ல; ஆலையரசர்களின் மனதுக்குத் தக்கபடி நடப்பவர்!——இதுதானே, நாம் அறிய வேண்டுமென்று, ஆச்சாரியார், விரும்பி, விளக்கம் கூறும் நோக்கமும்.

இல்லையெனின் கிருஷ்ணமாச்சாரியையும் ஆமதாபாத் ஆலைவாசியினரையும் ஏன், இழுத்து முடிச்சுப் போடவேண்டும்.

மந்தமதி
சுயநலம்

இரண்டும் உடையவர், கிருஷ்ணமாச்சாரி! ஆகவே, இவ்விதமெல்லாம் பேசத்தான் செய்வார், என்கிறார். மந்தமதிக்கு, விளக்கம் புள்ளி விபரம் அறியாதது! சுயநலத்துக்கு விபரம், ஆலையரசர்களுக்காகப் பரிந்துபேசி, கைத்தறியை இகழ்வது!!

இத்தகைய 'சர்டிபிகேட்', முன்னாள் கவர்னர் ஜனரலிடமிருந்து, இப்போதைய டில்லி மந்திரிக்குத் தரப்படுகிறது.

இதனை, இங்குள்ள தேசியத் திருவாளர்களுக்கு, சமர்ப்பிக்கிறோம்.

தோழர் டி. டி. கே. எத்தகைய மனிதர் என்பதை, சென்னை மாநிலம் அறியும். 'வெள்ளைக்கார சோப்பு' கம்பெனியின், ஏஜண்டு என்பதையும், வெள்ளையன் மூலமே வியாபாரச் சீமான் ஆனார் என்பதையும் அறிவோம். எப்போதும், வியாபாரக் கழுகுகள் பக்கமே, சாய்ந்திருக்கும் குணம்கொண்டவரென்பதையும், சென்னை மக்கள் அறிவர்.

ஆயினும், இந்தக் கருத்து, இப்போதுதான் உரம் பெறுகிறது. ஏனெனில். ஆச்சாரியாரே, தெரிவிக்கிறார்—இதனை. கிருஷ்ணமாச்சாரியாரின், வார்த்தை, வடநாட்டு ஆலையரசர்களை மகிழவைத்ததாம்! ஆலையரசர்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியது உண்மை. ஆனால் பொதுமக்களின் உள்ளத்தை? சோமப்பாவின் கண்டனம், வினோபாவேயின் ஆத்திரம், ஜயப்பிரகாஷின் ஆதரவு, இத்தனையும் குமுறி எழும்பிற்றே மத்திய அமைச்சரின் கூற்றைக் கேட்டதும். இது காட்டும் பாடம் என்ன? டில்லி மந்திரி, மக்களின் எண்ணங்களைச் சுமக்கவில்லை! பணக்கிபத்யத்தின் காவலராகயிருக்கிறார்!!—இதைத்தானே, இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. இவ்விதம், டில்லி மந்திரியை அறிமுகம் செய்துவைப்பவரோ, ஆச்சாரியார்; சாதாரணமான ஆளல்ல! ஆனாலும், தன்னைப் 'பைத்யம்' என்று கூறியதற்காகப் பழிவாங்கிக் கொள்கிறார்!! எனினும், அந்த ஆத்திரத்தில் சிந்திய உண்மையை எவர், ஒளிக்கமுடியும்?

திறமையிலாத,
பணப் பை பக்கம் சாய்கிற,

அமைச்சர், டில்லி பீடத்தை அலங்கரிக்கிறார். வதையும் லட்சக் கணக்கான கைத்தறியாளர்களை, ஒரு சில ஆலையரசர்களிடம் ஒப்படைக்கும் குணம் கொண்டவர், டில்லி அமைச்சர். பொறுப்புள்ள அமைச்சரின் நிலை, இதுவென்றால், டில்லி சர்க்காரைக் குறித்து, எவ்வித வார்த்தைகளால் வர்ணிப்பது?

டில்லி, ஒருபணக்காரர் பாசறை!— என்று நாம் சொன்னால் சீற்றம் வரும்.

"டில்லி சர்க்கார் — ஆலையரசர்களின் கூடாரம்"—என்று கூறினால் கோபிப்பர்.

"டில்லி டாடா, பிர்லாவின் ஆபீஸ்" என்று செப்பினால், சினம் கொள்வர்.

அவர்கள் முன்வைக்கிறோம் அன்பர் கிருஷ்ணமாச்சாரியையும், அவரை அறிமுகம்செய்துவைக்கும் ஆச்சாரியாரையும்.

என்ன சொல்வீர்கள், இப்போது? பொதுமக்கள் சர்க்கார் என்று மார்தட்டிப் பேசுகிறாரே, பண்டித நேரு, அவர்தான் என்னபதிலுரைக்க முடியும்! 'மந்தமதி'க்கும் கூர்த்தமதிக்கும், வேற்றுமை தெரியாமல; இது போன்ற விசித்திர உருவங்களை, அமைச்சர்களாக்கியிருக்கிறார்! அறிவுத் திறமைக்காக அமைச்சுப்பதவியா? அல்லது, 'அவர் வேண்டியவர். ஆகவே, இந்தா!' எனும் முறையில் வழங்கப்படுவதா? அச்சமின்றி, இலட்சக் கணக்கான மக்களின் வயிற்றில் மண்ணைத்தூவுகிறார், ஒரு நபர். அவர், மத்யசர்க்காரிலே, பொறுப்புள்ள மந்திரி! புள்ளி விபரத்தோடு, இந்த உபகண்டத்தின் வியாபாரத்தைக் கண்காணிப்பவர். அவர், மந்தமதியினர், என்று அறிமுகம் செய்துவைக்கிறார், ஆச்சாரியார். கணக்கர், கண்குருடென்றால், கடை எப்படி வாழும்? நாட்டின் வியாபார அமைச்சர், விபரம் அறியாதவரென்றால், எப்படி நாட்டின் பொருளாதாரம் செம்மையாக முடியும்?—இவ்விதமெல்லாம், கேள்விகள், கிளம்பத்தானே செய்யும்.

இந்தக் கேள்விகளையே, டில்லியின் தொண்டர் குழாத்துக்கு வைக்கிறோம்.

'பிரமாதமாகப் பேசுகிறீர்களே— அதன் அழகு இதுதானா?'—எனும், வேதனையோடு!

ஆச்சாரியார் 'அறிமுகம்' செய்யும் டில்லி அமைச்சரைப்பற்றி அறிந்தால் அறிவுலகம் கேலி செய்யும். அவ்வளவு வெட்கககேடு!

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

இரையையும், பக்கத்துக் கூட்டு பருந்து பறித்துச்சென்றுவிட்டால்! பதறத்தானே செய்யும்.

இந்த உண்மையை, ஏகஇந்தியா என்று பேசும் தோழர்கள் மறந்துவிடுகிறார்கள். எல்லோரும் மனித இனம்தான்! உலகில் உலவும் கோடானு கோடிபேரும் மனிதர்கள் தான்!!—என்றாலும எவ்விதம், அவரவர்களுக்கும்தனித்தனிநாடும், வாழ்வும் தேவைப்படுகிறதோ, அதைப் போலத்தான் ஒவ்வொரு இனத்துக்குள்ள பிரச்னைகளும். இந்த அடிப்படையை அறியாமலேயே, தேசியம் பேசுவோர், குதிக்கிறார்கள்! முப்பது கோடி பேர் நிறைந்த இம்மாபெரும் பூமியை, 'டில்லி' மட்டுமே ஆண்டுவிட முடியும், என்று கனவு காண்கிறார்கள். பல இனத்தவர்கள் வாழும் இந்த பூமிப்பரப்பை, தமது 'தூதுவர்களால்' நிர்வகித்திட முடியும் என்கிற அசட்டுத்தைரியத்தைக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான்,

வெளி அதிகாரிகளை அனுப்புவதும், வெளிகவர்னர்களை நியமிப்பதும், சுயநலமிகள் சிலரை சேர்த்துக்கோள்வதும்,

ஆக, பற்பல பாதைகளில், நடைபோட்டுப் பார்க்கிறார்கள். பலிக்கக் கூடிய காரியமா, இது! மாற்றான் வாழ, தான் மட்டும் வாடுவதைக் காணும், கூட்டம் எப்படிச்சகிக்கும் இந்த ஆதிக்கத்தை?

பரஸ்பரம் பலர் ஒத்துப்போவது என்பது வேறு—அதற்கு இரத்த பாசம் இருக்க வேண்டும்—மொழி உறவு இருக்கவேண்ம்—கலாச்சாரத் தொடர்பு இருக்க வேண்டும். இவைகள் அனைத்தும் இருந்தாலுங்கூட, அவரவர்கள் வாழ்க்கையில் தலையிடாமலிருக்கும், மனப்பண்பும் இருக்க வேண்டும். இந்தக் குணதிசயங்களில், எதுவுமே இல்லாத, வடநாட்டாதிக்கம், தனது சாகசத்தைமட்டும் முதலாக வைத்து ஆள்வதென்பது சாத்யமா?—இந்தக் கேள்வியைத்தான், இந்தக்கிளர்ச்சி, தூண்டுகிறது.

*

வாடுகின்றனர் வேலையில்லாமல்! அவர்களை புறக்கணித்துப் பிறரைத்திணிக்கிறது டில்லி சர்க்கார்!!— இதை, ஐதராபாத் இளைஞருலகால் சகிக்க முடியவில்லை. 'யார் இந்த மத்யசர்க்கார்?' என்று கேட்கிறார்கள். 'அவர்களை வெளியேற்று' என்று சர்ஜிக்கிறார்கள். இந்த கர்ஜனை சம்பந்தமாக எழுதவந்த 'இந்து' இதழ் "பிறர்கூடாதென்பது தவறு. ஏனெனில் ஐதராபாத்தை நிர்வகிக்க போதுமான அதிகாரிகள் அங்கே இல்லை" என்று, விசித்திரவாதம், ஒன்றைக் கூறுகிறது. பலர், பாடிக் காட்டிய பாட்டு! ஆதிக்கக் காரர்களெல்லாம் பாடிய பாட்டு!! — அதை, காட்டுகிறது, 'இந்து'. இதுபோன்ற, எடுத்துக் காட்டுகள், பிரச்னையைத் தீர்த்துவிவ முடியாது

ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக்கும் மக்கள் சுகமாக வாழ விரும்புகிறார்கள். தமது வாழ்க்கையில் பிறர் தலையிடுவதை விரும்பவில்லை. தங்களுக்கு முக்கியத்துவம் இருக்க வேண்டுமெனத்துடிக்கிறார்கள்.

இந்த உண்மையைத்தான், இந்தக் கிளர்ச்சி, அறிவுறுத்துகிறது. இதனை, ஆதிக்கப்பாதையில், அவசர நடைபோடும் டில்லிக்குச் சமர்ப்பிக்கிறோம்— "அன்பரீர்! எதையும அதிகாரத்தால்சாதித்திட முடியாது. அதிலும் இப்பரந்த உபகண்டத்தை, 'ஒரே நாடு' என்று லாலி பாடியே காலத்தை ஒட்டிவிட முடியாது. அவரவரும் வாழத்துடிக்கிறார்கள். அவர்கள் வாழ்வு பெற்றபின், தமது இச்சைப்படி தமது இனத்தோடு வாழ்வார்கள். அது அவர்கள் உரிமை. அதை ஆதிக்கத்தால், உடைத்து விடலாம் என்று கனவுகாணாதீர்."

★

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

தி. மு. க. ஆண்டுமலர் 22–9–52 அன்று இங்கிருந்து அனுப்பப்படும். ஏஜண்டுகளுக்கு மறுநாள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்.

## பொதுச் செயலாளர் சுற்றுப் பிரயாணம்

பொதுச்செயலாளர் சி, என். ஏ, அவர்கள், தில்லை-வில்லாளன் உடன் வர, கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

செப். 12 சென்னை திருமணம்
13 பொன்மலை இரயில்வே தொழிலாளர் மாநாட்டு நிகழ்ச்சி துவக்க விழா
14—காலை 8-மணி கும்பகோணம் திருமணம்
10-மணி, திருநாகேசுவரம் திருமணம்
மாலை 3-மணி தஞ்சை திருமணம்
மாலை 5-மணி பொன்மலை இரயில் உபயோகிப்போர் மாநாடு
21 மதுரை
23 திருச்சி
27 ஆத்தூர்
28 கள்ளக்குறிச்சி
அக். 5 அம்மையப்பன்

★

# திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின்

# ★ புது நிர்வாகிகள் ★

## கோவை மாவட்டம்

**ஈரோடு**

செய: இரா. பெருமாள், துணை: இ.எ.மாதர்சா, பொருள்: கே. ஆறுமுகம், மாவட்ட: ஈ.வி.கே. சம்பத், எஸ். அப்பாவு, எஸ். ஆர். சந்தானம், செயற்குழு: 21 பேர்.

**பவானி**

செய: என். ரங்கசாமி, துணை: பி.எ. தங்கவேல், பொரு: வி. திருப்பதிசாமி, மாவட்ட: விபரம் இல்லை, செயற்குழு 11 பேர்.

**தொட்டிய காட்டாம்பட்டி**

செய: கே சிவராமன், துணை: விபரம் இல்லை. பொரு: விபரம் இல்லை. மாவட்ட: தி. பெரியசாமி, செயற்குழு: 11 பேர்.

**பொள்ளாச்சி**

செய: பி. எஸ். பாலகிருஷ்ணன், துணை: கி. சதாசிவம், பொருள்: பொ. ச. உசேன், மாவட்ட: கா. சின்னதுரை, செயற்குழு: 13 பேர்.

**குமணநகர் (கொழுமம்)**

செய: வி. பி. ராமசாமி, துணை: ஆ. மாரிமுத்து, பொரு: கே. எ. ஆறுமுகம், மாவட்ட: பி. கோபால், செயற்குழு: 11 பேர்.

**அவிநாசி**

செய: எஸ். ஆர். சண்முகம், துணை: ஆர். கிருட்டிணன், பொரு: எஸ். அவிநாசியப்பன், மாட்டப்: டி. யு. சந்திரன், செயற்குழு 11 பேர்.

**குன்னூர் (ஆர். எஸ்.)**

செய: வீ.கா. ஒளியழகன், துணை தி. ச. முருகேசன், பொரு: ச. அய்யூப், மாவட்ட: விபரம் இல்லை, செயற்குழு 18 பேர்.

**மாமரத்துப்பட்டி**

செய: பசுபதி, துணை: வெ. ரங்கசாமி, பொரு: வேல்சாமி, மாவட்ட எம். எஸ். பெரியசாமி, செயற்குழு 13 பேர்.

**மேட்டுப்பாளையம் (நீலகிரி)**

செய: சண்முகநாதன், துணை: என். சுப்பையன், பொரு: கே.எஸ். வாசன், மாவட்ட: எம். இ. ரகுபதி, எச். பி. நஞ்சையா, செயற்குழு 17 பேர்.

**சென்னிமலை**

செய: எ. முருகேசன், துணை: ஆர். சிவன்மலை, பொரு: சி. எஸ். அலாவுதீன், மாவட்ட: க. சு. திருமலைசாமி, செயற்குழு 11 பேர்.

**தென்செங்கம்பாளையம் (கோட்டூர்)**

செய: எஸ். வி. அரசு, துணை: எஸ். எம். தங்கவேலு, பொருள்: எஸ். ஆர். சாமிதுரை, மாவட்டப்: ச. க. நடராசு, செயற்குழு 11பேர்.

**மலையாண்டிப்பட்டிணம் (கோட்டூர்)**

செய: ம. ப. ஆறுமுகம், துணை: கே. ஆர். இந்தா, பொரு: எம். ஆர். நாச்சியப்பன், மாவட்ட: என். தங்கவேல், செயற்குழு: 17 பேர்.

**மயில்ரங்கம்**

செய: எ. பாலசுப்பிரமணியம், துணை: கே. சிவ சுப்பிரமணியன், பொரு: முத்துசாமி, மாவட்ட: எ. பாலசுப்பிரமண்யம், செயற்குழு 11 பேர்.

**புஞ்சை புளியம்பட்டி**

செய: பி. எ. சாமிநாதன், துணை: வி. ஓதி வேலப்பன், பொரு: பி. எஸ். இராசு; மாவட்ட: பி. கே. சுப்பிரமணி, செயற்குழு: 21 பேர்.

**நம்பியூர்**

செய: என்.ஆர்.ரங்கசாமி, துணை கே. பி. கரிச்சியனன், பொரு: கே. பி. குமாரசாமி, மாவட்டப்: என். கே. இளங்கோ, செயற்குழு 18 பேர்.

## சேலம் மாவட்டம்

**கொளத்தூர்**

செய: கே. குருசாமி, துணை: கே. அனந்தராசு, பொரு: கே. எ. வையாபுரி, மாவட்ட: ஜி. சதாசிவம் செயற்குழு: 19 சபர்,

**அரிசிபாளையம்**

செய: பி.எ. வீரபத்ரய்யா, துணை கே. எஸ். குப்புசாமி, பொரு: எம். எ. சின்னையா, மாவட்ட: பி.எ. வீரபத்ரய்யா, செயற்குழு: 14 பேர்.

**தர்மபுரி**

செய: டி. சி. கிருஷ்ணன், துணை த.ந. பச்சையப்பன், பொரு: பூ. கெங்காதரன், மாவட்ட: த.ந. குப்புசாமி, செயற்குழு: 13 பேர்.

**பெரியப்பட்டி**

செய: எ இ. வரதராசன், துணை பி. என். வெங்கடாசலம், பொரு: பி. எஸ். கோவிந்தன், மாவட்ட, பி. என். வெங்கடாசலம், செயற்குழு: விபரம் இல்லை.

**குன்னத்தூர் (பெரியமருதூர்)**

செய: கோ. முருகன், துணை: வ. இரங்கசாமி, பொரு: மா. சீரங்கன், மாவட்ட: ப. வேலர், செயற்குழு 11-பேர்

**அம்மாபேட்டை**

செய: பி. எம். கோபால், துணை: எம். எம். மாணிக்கம். பொரு: பி. கே. பி. சுப்பிரமணி, மாவட்ட: கே. எஸ். கோவிந்தன், செயற்குழு 16-பேர்.

**மோகனூர்**

செய: ப. இராதாகிருஷ்ணன், துணை: மு. குருசாமி, பொரு: எ. கே. செங்கசாமி, மாவட்ட: ப. ராதாக்கிருஷ்ணன், செயற்குழு 15-பேர்.

**வெண்ணந்தூர்**

செய. பி. எம். சுப்பிரமணியம், துணை: எ. முனியன், பொரு: பி. என். இராமலிங்கம், மாவட்ட. பி. எம். சுப்பிரமணியம் செயற்குழு 8-பேர்

**வெங்கடசமுத்திரம்**

செய: எம். எஸ். ராமநாதன், துணை: எம். ஈ. வெள்ளை, பொருள்: ஆர். கந்தசாமி, மாவட்ட: விபரம் இல்லை. செயற்குழு 12-பேர்

**புனல்வாசல்**

செய: மு. உமாபதி, துணை: அ. ராசுலு, பொரு: சே. வெங்கடாசலம், மாவட்ட: ரா. கருப்பண்ணன் செயற்குழு 7-பேர்.

**மத்தூர்**

செய: ம. சண்முகம், துணை: ஒ. நடராசன், பொரு: ம. ர. கிருஷ்ணன், மாவட்ட: யா. நெடுமாறன். செயற்குழு 8-பேர்.

**சகதேவி**

செய: எம். காவேரி, துணை: ஜே. சி. புருஷோத்தம், பொரு: கே. சுப்பிரமணியம், மாவட்ட: கே. வேலன் செயற்குழு 13-பேர்

**ஆரகளூர்**

செய: எ. எ. கோவிந்தராஜுலு, துணை: டி. கோவிந்தன் பொரு: தி. கு. ஆள்வார், மாவட்ட: தி. கு. ஆள்வார், எஸ். ஆர். சென்றாயன் செயற்குழு 11-பேர்.

**ஆனையாம்பட்டி**

செய: டி. ஆர். மாரியப்பா, துணை எ. பழனிமுத்து, பொருளாளர்: பி. கோபால், மாவட்ட: சி. தங்கராசன் செயற்குழு: 12-பேர்.

## இராமநாதபுரம் மாவட்டம்

**சத்திரப்பட்டி**

செய: அ. குருசாமி, துணை: எ. முத்தப்பா, பொரு: டி. கே. சே. சாமி, மாவட்ட: முத்தரசு, க. குருசாமி, செயற்குழு. 8 பேர்.

**நயினார்கோயில்**

செய: எஸ். கார்த்திகேயன் துணை: ம. கருப்பையா, பொரு: மு. பாண்டி, மாவட்டம்: மு. மங்களநாதலிங்கம். செயற்குழு 13 பேர்

**காளாப்பூர்**

செய: பழ. செல்லய்யா, துணை: ச. சேது, பொரு: பொன்வேலன், மாவட்ட: எம். ஏ. என். அழகு, செயற்குழு 9-பேர்.

**தென்மாப்பட்டு**

செய: பரமசிவம், துணை: ம. மணி பொருளாளர்: சொ. செல்லச்சாமி, மாவட்ட: கா. முகம்மதலி, செயற்குழு: 11-பேர்.

**அலவாக்கோட்டை**

செய: வெ. கருப்பையா, துணை: கா. ராமநாதன், பொரு: பெ. சுந்தரம், மாவட்ட பெரு. கருப்பையா, செயற்குழு: 14-பேர்.

**மண்டலமாணிக்கம்**

செயலாளர்: பர. ராமகிருஷ்ணன், துணை: சி. சி. ராமசாமி, பொரு: பி. செகந்நாதன், மாவட்ட: தே. இளங்கோவன். செயற்குழு: 8-பேர்

**இலுப்பைக்குடி**

(heading as printed: இதும்கரிசல்குளம்)

செய: க. வேலாயுதம், துணை, வே. சுப்பையா, பொரு: ஆ. கருப்பையா, மாவட்டப்: கா. செல்லய்யா, சு. ரமசாமி, செயற்குழு: 16-பேர்.

**சிவகாசி**

செய: எ. பி. தங்கராஜன், துணை: கே. சங்கரலிங்கம், பொரு: எஸ். கே. எ. கணேசன், மாவட்ட: எஸ். கே. எ. சுப்பையா, செயற்குழு: 9-பேர்.

**சீவில்லிபுத்தூர்**

செய: கோ: பெருமாள், துணை: எஸ். இராமதாசு, பொரு: ச. செந்தியப்பன், மாவட்ட: கோ. பெருமாள். செயற்குழு: 4-பேர்

**திருஉத்திரகோசமங்கை**

செய: இரா. சந்திரன், துணை: ச. குருமாணிக்கம், பொரு: ஐ. பிச்சை மாவட்ட: ச. நாகலிங்கம், செயற்குழு 21-பேர்.

**இராஜபாளையம்**

செய: கோ. சந்திரன், துணை: பெ. இரத்தினசாமி, பொரு: த. கனகசபாபதி, மாவட்ட: ஆ. சோ. சேதுராமன், செயற்குழு 15-பேர்

**வீரசோழன்**

செய: பி. யு. எல். காட்டுவாமுகைதின், துணை: எம். கே. அகம்மது முஸ்தபா, பொரு: எ. அகம்மது சுல்தான், மாவட்ட கா. இ. அகம்மது இப்ராகிம், செயற்குழு 17-பேர்

**கீழப்பூங்குடி**

செய: இரா. செங்குட்டுவன், துணை: ஆதி சுப்பையா, பொருள்: உ. சுப. ஆதிமைமுகன், மாவட்ட: உ. சுப. ஆதிமைமுகன், அரு. அன்பரசன், செயற்குழு: பேர்.

**நல்லமங்கலம்**

செய: பி. எல். சுப்பையா, துணை எஸ். மலைக்கனி, பொரு: ஆர். என்.

---

**கிளைக் கழகத் தோழர்களுக்கு**

அண்மையில் நடந்த கிளைக் கழகத் தேர்தல் விவரங்களை, அதற்கெனத் தனியாக தலைமை நிலையத்திலிருந்து அனுப்பியுள்ள "கிளைக் கழகப் பதிவுச் சீட்டு" என்ற அச்சுத்தாளில் எழுதி யனுப்பாத கிளைகள் உடனடியாக அனுப்பிவைக்கவேண்டுவதுடன், மேற்படி "சீட்டு"க் கிடைக்காத கிளைகள், குறிப்பாக திருச்சி, நெல்லை, மதுரை ஆகிய மாவட்டத்தைச்சேர்ந்தவைகள் தலைமை நிலையத்திற்கெழுதிக் கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டு கிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
பொறுப்பாளர்

---

# குன்றத்தூர் வழக்கு

## தி. மு. க. வெற்றி

ஏழு முறை சுட்டு,
தடியடியால் தாக்கி,
சட்டமீறியதாகக் கூறி,
விலங்கு பூட்டி,
வீதியில் ஓட்டி,
கூண்டு ஏற்றி,
சிறையிலே தள்ளி,
வழக்குப் போட்டு,
'வா!' 'போ' என
அலைக்கழித்து,

சித்திரவதைக் கெல்லாம் நமது கழக வீரர்களை ஆட்படுத்திய 'குன்றத்தூர்' நிகழ்ச்சியின, முழு விபரங்களையும், நாடு அறியும். பேச்சுரிமைக்காகப் போராடும் நாம், 'நீதிக்கு என்றும் உயர்வுண்டு' என்பதை நெஞ்சிலிறுத்தி, ஆளவந்தாரின் அம்புகளைத் தாங்கிக் கொண்டே வந்தோம். சுட்டுப் பொசுக்கியது மன்றி, நமது கழக வீரர்கள் என். வி. நடராசன், பாலசுந்தரம் ஆகியோர்மீது வழக்கும் போட்டிருந்தது, சர்க்கார்.

குன்றத்தூர் கோர நிகழ்ச்சி நடைபெற்றது 22—10—50-ல்; இந்த வழக்கு பற்றி 8—9—52ல் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது!

"வழக்குதள்ளுபடியாகிவிட்டது" —என்று மாஜிஸ்திரேட் தீர்ப்பு தந்துவிட்டார். அடக்கு முறைப் பாதையில் விரண்டோடிய ஆளவந்தாரின் முகத்தில் நீதி, கரி பூசிவிட்டது! இரண்டு ஆண்டுகளாக, இந்த வழக்கில் நமது தோழர்களை, சர்க்கார் அலைக்கழித்த விபரத்தைக் கேட்டால், மிகவும் வேடிக்கையாகும். ஒருநடவைக்குசாட்சிவரவில்லை என்றொரு காரணம்! மற்றொருநடவை அதிகாரி வரவில்லை என்ற தகவல்! —இவ்விதம், இரண்டு ஆண்டுகள் இழுத்தடித்தும், நீதி தன் பணியைச் செய்துவிட்டது. நம்மை நிரபராதியாக்கிவிட்டது.

வழக்கில் வாகை சூடிய வீரர்களை வாழ்த்துகிறோம்.

அதே நேரத்தில், இதுபோன்ற 144-விசும் பித்த விளையாட்டை அரசாங்கம் ஆடாமலிருக்கட்டும், மானத்தை இழக்காமலிருக்கட்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

குன்றத்தூர் தரும்பாடம், பாசிச வெறியர்களுக்கு நல்ல சவுக்கடி.

குன்றத்தூர் வழக்கின் முதற் கட்டத்தில் பெத்துநாய்க்கன் பேட்டை வழக்கறிஞர் [illegible] ராமன் M. A., B. L-ம் [illegible] கட்டத்தில் சேலம்பாக்கம் வழக்கறிஞர் எஸ். [illegible] B. A., B. L-ம், கழகத் தோழர்களுக்காக வாதாடினர். அவர்களின் [illegible] மிருந்த உதவிக்கு நமது நன்றி.

தம்பி, மாவட்ட: எஸ். மலேக்கணி, செயற்குழு: 11 பேர்.

**வதூவார்பட்டி**

செய: அம். சின்னச்சாமி, துணை எஸ். வெங்கட்ராமன், பொரு: மா. அ. அமிர்தபாண்டியன், மாவட்ட: எஸ்.எம். வைரப்பெருமாள், செயற்குழு: 11 பேர்.

## திருச்சி மாவட்டம்

**லப்பைக்குடிக்காடு**

செய: கே. வி. எ. சுக்கூர். துணை: ஏன். பி. எ. கபீர். பொரு: கே. பி. எம். உசேன். மாவட்ட: கே. கே. கே. சம்த, செயற்குழு: விபரம் இல்லை.

**உடையார்பாளையம்**

செய: டி. கே. திராவிடமணி துணை: ந. மருதமுத்து. பொரு: டி. ஆறுமுகம். மாவட்ட டி. யூ. எஸ். சந்தரம். செயற்குழு 8 பேர்.

**பிமநகர்**

செய: து. சண்முகம். துணை: செ. ரா. பாலகிருட்டிணன். பொரு: அ. சேரன். மாவட்ட: விபரம் இல்லை. செயற்குழு: 10 பேர்.

**சோபனபுரம்**

செய: எஸ். கே. பத்மநாபன். துணை: எஸ். சிவஞானம். பொரு: கே. கோபால். மாவட்ட: எம். நல்லப்பா ரெட்டி. செயற்குழு: விபரம் இல்லை.

**மேல்ப்பழூர்**

செய: டி. வி. யூ. சுந்தரராசு. துணை: ஆர். செல்லமுத்து. பொரு. ஆர். சுந்தராவ். மாவட்ட எம். ஆர். செல்லப்பா, எ. ஆர். இரத்தினம். செயற்குழு: 11 பேர்.

**நாத்தய்யங்கார்பேட்டை**

செய: கு. பழனியப்பன், துணை: மு. குபேந்திரன். பொரு: தி. பெருமாள். மாவட்ட: மு. பெ. முத்துக் கருப்பன். மற்ற விவரங்கள் இல்லை.

**விரசோழபுரம்**

செய: பூ. கலியமூர்த்தி துணை: ச. அ. செஞ்சயல். பொரு. க. சிதம்பரம். மாவட்ட: ரு. மாரிமுத்து செயற்குழு: 17 பேர்கள்.

**சந்நாசிநல்லூர்**

செய: இ. ரா. கிருஷ்ணசாமி. துணை: ச. அ. செஞ்சயல். பொரு: கு. அரங்கசாமி. மாவட்ட: இரா. கிருஷ்ணசாமி செயற்குழு: 11பேர்.

**அசாபீரன்**

செய: து. பச்சமுத்து. துணை: ம. சாமிநாதன். பொரு: இரா. கோவிந்தசாமி, மற்ற விவரங்கள் இல்லை.

**நடுப்பட்டி**

செய: வி. வீரபத்திரன். துணை: எம். ஏ. பொன்னையா. பொரு: எல். தனிக்கொடி. மாவட்ட: எம். ஏ. பொன்னையா, செயற்குழு 21 பேர்.

**பூவாளூர்**

செயலா: பி. சி. சேது, துணை: குழந்தைவேலு, பொரு: பி. சின்ன தம்பி, மாவட்ட: விபரம் இல்லை. செயிற்குழு: 11 பேர்.

**சோமரசம்பேட்டை**

செய: வி. எம். கணேசன், துணை கே. பி. ரெங்கராசன், பொரு: எ. மருதமுத்து, மாவட்ட: டாக்டர் எ. ஜான், செயற்குழு: 11 பேர்.

---

### ஈரோடு: கூட்டணி

19—3—52 செவ்வாய்க்கிழமை திரு. ஈ. வி. கே. சம்பத்இல்லத்தில் ஈரோடு நகர மக்கள் கூட்டணி செயற்குழு கூட்டம் திரு ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தலைமையில் கூடியது. அது சமயம் நகர மக்கள் கூட்டணிக்கு நிர்வாகஸ்தர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்:- ஈ. வி. கே. சம்பத். செயலாளர்:- கே. எஸ். நாச்சிமுத்து துணைச் செயலாளர்கள்:- வி. டி. ஆர். லட்சுமணன், எஸ். அப்பாவு பொருளாளர்:- ஈ. ஆர். முத்துசாமி.

---

# திருச்சியில்—நகர சீர்திருத்தக் கழகம்

திருச்சி நகர சபைத் தேர்தலையொட்டி முற்போக்கு எண்ணங் கொண்டோர் ஒன்று கூடி. நகர சீர்திருத்தக் கழகம் என்ற அமைப்பை 2—9—52 அன்று அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தோழர் என். சங்கரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி அமைப்புக் கூட்டத்தில், இந்தக் கழகம் அமைக்கப்படுவதன் நோக்கத்தை விளக்கி தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம். எஸ். மணி ஆகியோர் பேசினர். நிறைவேறிய முடிவுகள்:

(1) திருச்சியில் கட்சி சார்பில் போட்டியிடும் காங்கிரசையும், சுயநல வாதிகளையும், சந்தர்ப்ப வாதிகளையும், முறியடித்து நகர சபையை கட்சிப் பற்றில்லாத பொது மக்கள் சபையாக ஆக்குவதற்கு முற்போக்கு எண்ணங்கொண்டவர்களை ஒன்று கூட்ட நகர சீர்திருத்தக் கழகம் அமைக்கப்படுகிறது.

(2) நகர சபைத் தேர்தலில் மேற்படி கழகத்தின் சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதென்றும்போட்டியிடாதஇடங்களில்முற்போக்கு எண்ணங்கொண்ட பொது நல ஊழியர்களை ஆதரிப்பதெனவும், அதற்காக கீழ்க்கண்ட ஒரு குழுவினரை இக்கூட்டம் நியமிக்கிறது:- பி. பாண்டுரங்கன், டி. வி. எஸ். பாலன், எம். மாணிக்கம், என். சாம்பு, எம். ஷரீப், தொ. பா. கோபாலகிருஷ்ணன், டி. டி. சிவ புண்யம்.

மேற்படி கழகத்தின் கன்வீனராக தோழர் எம் எஸ். மணி பணியாற்றுவார்.

*

காங்கிரஸ் ஆதிக்கத்தை நகர சபையில் ஏற்படாமல் தடுக்கு முகத்தான் முற்போக்கு கட்சிகளின் கூட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த தோழர்கள் கலியாண சுந்திரம் எம். எல். ஏ. (கம்யூனிஸ்டு) எம். எஸ். மணி (தி. மு. க.) ஆகியோரை அமைப்பாளராக நியமிக்கப் பட்டிருந்தது. இதை யொட்டி இரண்டு தோழர்களும் பல நாட்கள் விவாதித்தும், நல்ல சூழ்நிலை ஏற்படாததால், மேற்படி கூட்டு அமைப்பு முயற்சி வெற்றி தரவில்லை. ஆகவே, திருச்சிகம்யூனிஸ்டு தோழர்கள் மேற்கொள்ளும், நகர சபைத் தேர்தல் சம்பந்தமான எந்தக் கூட்டு முயற்சிக்கும் தி. மு. க. தோழர்களுக்கும் எவ்விதசம்பந்தமுமில்லை யென்று திருச்சி தி. மு. க. செயலாளர் எம். எஸ். மணி அறிவிக்கிறார்.

*

### மதுரம் மறுப்பு

திருச்சி நகர சபைத் தேர்தல் சம்பந்தமாகத்தான் எவ்வித சிரத்தையும் எடுத்துக்கொள்ளவில்லையென்றும், பார்லிமெண்டு மெம்பரான தனது சேவையை இனி பெரும்பாலும் சட்ட சபையிலேயே ஈடுபடுத்த வேண்டியிருப்பதால் தான் எவ்வித அக்கரையும் மேற்கொள்ளவில்லை யென்றும் தெளிவாக்கி திருச்சி நகர சபைத் தலைவர் டாக்டர் மதுரம் எம். பி. அவர்கள் அறிக்கை யொன்று விடுத்துள்ளார். வேண்டுமென்றே சிலர் கிளப்பும் வதந்திகளை நம்ப வேண்டாமெனப் பொதுமக்களை அவர் கேட்டுக் கொள்வதோடு, "அனுவசியப் போட்டிகளைத் தவிர்த்து தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சிகளும் தனிப்பட்ட பிரமுகர்களும் ஒன்று சேர்ந்து ஏதேனும் சமரசம் செய்துகொள்ள சர்தர்ப்பம் உண்டா? இயலுமா? என்பதிலேயே நான் பெரிதும் கவனம் செலுத்திக் கொண்டுள்ளேன்" என்றும் குறிப்பிட்டிருப்பதோடு, உண்மைப் பொதுநல ஊழியர்களே நகர சபையை அலங்கரிக்க வேண்டுமெனத் தான் அவாவுறுவதாகவும் தெரிவித்துக்கொள்கிறார்.

---

## மதுரை மாவட்டம்

**புது ஆயக்குடி**

செய: வி. சுடர்ஒளி, துணை: ஆறுமுகம், பொரு: அபீபுரகிமான், மாவட்டப்: ஆ. பொன்னுசாமி. செயற்குழு 5 பேர்.

**நாகமலை புதுக்கோட்டை**

செய: எம். சிவசாமி, துணை: ப. முத்துக்கனி, பொரு: க. மு. பாண்டியன், மாவட்டப்: கே. நடராசன், செயற்குழு. 8 பேர்.

**உசிலம்பட்டி**

செய: எ. பி. ஒ. அரிராமன், துணை: எஸ். சொக்கலிங்கம், பொரு: சி. பாலசுப்ரமணியன், மாவட்டப்: கே. எம். செயராமன், வி. சுப்ரமணியம். செயற்குழு 12 பேர்.

**தேவதானப்பட்டி**

செய: பி. எம். கே. முஸ்தபா கமால் பாட்சா, துணை: ப. சு. மணி, பொரு: ரா. பொன்னரசு, மாவட்டப்: எம். எஸ். பழனியப்பன், செயற் குழு 11 பேர்.

**தேவாரம்**

செய: மு. ராசாராம், துணை: மு. சுப்ரமணியம், பொரு: த. ராமர், மாவட்டப்: வீ. சுருளிச்சாமி. செயற்குழு 9 பேர்.

**கல்வார்பட்டி**

செயலாளர்: ஜி. வெங்கடாசலம், துணை: கே. எல். ஆர். பரிபூரணம், பொரு: ராகவன், மாவட்டப்; ஜி. வெங்கடாசலம், எல். வீராசன், செயற்குழு 9 பேர்.

**அய்யம்பாளையம்**

செய: சி. இருளப்பன், அ. கொ. வரதராசன், பொரு: மூ. ஆ. இரா. ஆறுமுகசாமி, மாவட்டப்: சி. இருளப்பன். செயற் குழு 14 பேர்.

**அழகாபுரி**

செய: ஏ. எஸ். மாரிமுத்து, துணை: வி. கே வீரநாதன், பொரு: கி. அ. க. சின்னகணபதி, மாவட்டப்: எஸ். தனுஷ்கோடி. செயற்குழு: 13 பேர்.

**தேவரப்பன்பட்டி**

செய: பா. மு. பாலுசாமி, துணை: எம். லிங்கையன், பொருளாளர்: சி. சோமசுந்தரம், மாவட்டப்: எ. திருமால்ராசு, செயற் குழு 7 பேர்.

**திருமங்கலம்**

செய: கு. ப. ம. தர்மன், துணை: எம். ஏ. ரசாக், பொருளாளர்: மு. பொன்னுசாமி, மாவட்டப், ஆர். ராசமன்னர், கு. ப. தர்மன், செயற்குழு விவரம் இல்லை.

**குல்லலகுண்டு**

செய: அ. கருப்பையா, துணை: ச. பழனியப்பன், பொரு: மு துரையப்பன், மாவட்டப்: சி. நடராசன். செயற் குழு 11 பேர்.

**சோழவந்தான்**

செய: எஸ். செல்லத்துரை துணை: கே. சோமு, பொரு: சா. பழனியப்பன், மாவட்டப்: விவரம் இல்லை. செயற் குழு 15 பேர்.

## தஞ்சை மாவட்டம்

**கும்பகோணம்**

செய: எஸ். கே சாமி, துணை: வி. கோவிந்தராசன், பொருளாளர்: என். எஸ். கோவிந்தசாமி, மாவட்டப்: கே. கே. நீலமேகம், எஸ். எஸ். கோவிந்தசாமி, வி. பராங்குசம், எஸ். என். அனந்தாச்சாரி, ஜி. நாராயணசாமி, செயற் குழு 12 பேர்.

**எடமேலையூர்**

செய: எஸ். தங்கப்பன், துணை: என். மகாலிங்கம், பொரு: கே. எஸ். நடராசன், மாவட்டப், என். எஸ். நடராசன், எஸ். ராமசாமி, செயற் குழு 8 பேர்.

**கருவாழக்கரை**

செய: டி. அகோரம், துணை: க. ராமு, பொருள்: எம். நாராயணசாமி, மாவட்டப்: து. சம்பந்தம், செயற் குழு 14 பேர்.

**பொன்னிரை (ஆலத்தம்பட்டி)**

செய: கோவிந்தசாமி, துணை: விவரம் இல்லை. பொருள்: இலட்சுமணன், மாவட்டப்: இரா. சாம்ப சிவம்.

**அதிராம்பட்டினம்**

செய: வி. சீனிவாசன், துணை: எ. அலீம், பொருள்: ஆர். முனுசாமி, மாவட்டப்: ப. முருகையா. செயற் குழு 5 பேர்

**மருதூர் வடக்கு**

செய: மா. சுப்ரமணியன், துணை: பொ. வைரப்பன், பொரு: மு. வைரப்பன், மாவட்டப், ப. முருகையா. செயற் குழு: 5 பேர்.

**உள்ளிக்கோட்டை**

செய: எஸ். உத்திரபதி, துணை: எஸ். குப்புசாமி, பொருள்: பி. துரைசாமி, மாவட்டப்: என். அருணாசலம், செயற் குழு 11 பேர்.

**திருவிடமருதூர்**

செய: டி. எ. இராமசாமி, துணை டி. ஆர். கே. சுந்தரம், பொருள்: டி. கே. மகாலிங்கம், மாவட்டப்: கே. மகாலிங்கம், செயற் குழு 17 பேர்.

**குருவப்புலம்**

செய: பி. எஸ். நடேசன், துணை: பி. முருகையன், பொரு: எ. சோமு, மாவட்டட்: எஸ். வி இராமாமிர்தன், செயற் குழு: 10 பேர்.

**திருமேனியார் கோயில்**

செய: பொ. தருமன், துணை, மு. கலியபெருமாள், பொருள்: க. சொக்கன், மாவட்டப்: பொ. தருமன், செயற் குழு விவரம் இல்லை.

**வெங்கிடங்கால்**

செய: எ. சந்தானம். துணை: எஸ் ராமையா, பொரு: சா. ராமசாமி. மாவட்டப்: வி. சௌரிராசன். செயற்குழு: 6 பேர்

**பாலையூர்**

செய: பி.எஸ். இளங்கோ. துணை. எஸ். சொக்கலிங்கம். பொரு: சின்னதம்பி. மாவட்டப்: பி.எஸ். இளங்கோ. செயற்குழு: விவரம் இல்லை.

**செண்டங்காடு**

சேய: இரா. மாரிகண்ணு. துணை: மு. பழனிசாமி. பொருள்: ராமசாமி மாவட்டப் ந. சோமசுந்தரம். செயற் குழு 21 பேர்.

**கீழப்புனல்வாயல்**

செய்: வெ. திருவேங்கிடம். துணை: ஜி. சண்முகம். பொரு: என். சின்னையன் மாவட்டப்: வெ. திருவேங்கடம். செயற்குழு: 8 பேர்.

**கூப்பாச்சிக்கோட்டை**

செய: சி. வை. உத்திராபதி, துணை: வே. முருகையன், பொரு: ச. பழனி மாவட்ட: சி, கா. முத்து. செயற் குழு: 13 பேர்.

---

### பிறப்பு

சென்னை சேப்பாக்கத்திலிருக்கும் தஞ்சை: பரமசிவம் ராஜசுலோசனா தம்பதிகளுக்கு 5—9—52 அன்று ஆண்குழந்தை பிறந்து, தாயும் சேயும் சுகம்.

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

‘பொங்கல் மலர்’ ‘தி. மு. க. ஆண்டுமலர்’ என இரண்டு மலர்களாக ஆண்டில் வெளிவருகிறது. ஒரு பலருக்குமட்டும்தான் சந்தா தொகையுடன் சேர்த்து வந்தோம். எனவே, பொங்கல் மலரை சந்தா இதழுடன் பணமின்றி அனுப்பியிருந்தோம்.

எனவே, தி. மு. க. ஆண்டு மலருக்கென தனியாக அணு எட்டு அனுப்புகிறவர்களுக்கே மலர் அனுப்பப்படும். என்பதை தெரியப்படுத்துகிறோம்.

பணம் அனுப்புகிறவர்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதவும்.

நிர்வாகி.

## நெல்லை மாவட்டம்

**ஏரல்**

செய: மு. வெ. மணி, துணை: கி. முத்து. பொருள்: மா. க. மணி, மாவட்ட: இரா. சிவபெருமான்.

**கீழப்பாவூர்**

செய: ராமநாதன், துணை: பி.என். சந்தானமுத்து, பொரு: ஆர். ஆர். சிவன், மாவட்ட: வி. சிவபெருமாள்

**அம்பாசமுத்திரம்**

செய: வேலாயுதம், துணை: கு. பழனி, பொரு: கரிகாலன், மாவட்ட சு. நாராயணசாமி

**குளத்தூர்**

செய: த. தங்கம், துணை: சண்முககனி, பொரு: சி. வேல்ராசன், மாவட்ட: இரா. சபாபதி.

**புதியம்புத்தூர்**

செய: பெ. துரைசாமி, துணை: அனந்தப்பன், பொரு: துரைப்பாண்டி, மாவட்டப்: இ. துரைசாமி

**திருநெல்வேலி**

செய: வெ. திருப்பாற்கடல், துணை: எஸ். எ. எஸ். சுப்பையா, பொரு: பெ. தி. நாராயணன், மாவட்ட: சவீரபாகு, என். சங்கரலிங்கம், நா. வைத்தியநாதன்.

**புளியக்குடி**

செய: கே. பி. போத்திலிங்கம், துணை: இரா. பாண்டியன், பொரு: பி. எ. கங்காதரன், மாவட்ட: கே. பி. போத்திலிங்கம், வி. எஸ். ராமசாமி.

**தச்சநல்லூர்**

செய: வே. ஆ. சுப்பையா, துணை: எஸ். என். சாமி, பொரு: த. சு. அய்யம்பெருமாள், மாவட்ட: வே. இருதயசாமி

**தென்திருப்பேரை**

செய: சி. கே. சி. பாண்டியன், துணை: எஸ். எஸ். மணி, பொரு: பி முத்துமாலை, மாவட்ட: டி. கே. எஸ். பன்னீர்செல்வம்.

**ஸ்ரீ-வைகுண்டம்**

செய: ஜெகவீராசேந்திரன், துணை: சி. முத்துசாமி பொருள்: சி. கோபாலன், மாவட்டப்: எம். பி. டேவிட், மாணிக்கம்.

**விக்ரமசிங்கபுரம்**

செய: பி. எ. சாமி, துணை: கே. ஆர். அருமைத்தம்பி, பொரு: கரிகாலன், மாவட்டப்: சு. கந்தசாமி.

**கட்ம்பூர்**

செய: மா. சு. செல்லையா, துணை: மு. பேச்சியப்பன், பொருள்: ஆ. தங்கவேல், மாவட்டப்: வே. மு. மாரியப்பா, சு. தர்மராஜ்.

**ஆத்தூர்**

செய: செ. மி. பெரியசாமி, துணை: பெ. முத்து, பொரு: கக. பால்பாண்டி, மாவட்டப்: மகராசன், என். எஸ். துரை. ❁

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் வதைவது மக்கள், வருவது உதவி. அதை அளிப்பதில எடபடி, ‘சர்க்காருடைய’ நிவாரணத் திட்டம் பாதிக்கப்பட முடியும்? பணமின்றி தவிப்பவனுக்குப் பணம் தந்து ஒருவன் உதவுகிறான்! அதைக் கண்டு ஊராளும் சபையார், உதவிய உத்தமனிடம் சண்டைக்குப் போனால், என்னவென்று சொல்வது? அதே, நிலையில், ஆர்ப்பரிக்கிறது, டில்லி.

மாநில சர்க்காரோ, வாய் திறக்க மாட்டாது, விழிக்கிறது. பாபம், அது என்ன செய்யும்? அதிகாரம் இல்லையே, வந்த நன்கொடையைப் பெறவும், அதை வாடுவோருக்கு வழங்கவும்!

(1) சென்னை மாநிலத்து மக்கள், உணவுப்பொருள் இல்லாமல் வதைகிறார்கள்.

(2) உணவுப்பொருளை வெளிநாடுகளிலிருந்து வாங்கித்தரும் பொறுப்போ, டில்லியிடம், இருக்கிறது.

(3) டில்லியோ, ‘என்னிடம் பணமில்லையே’ எனறு முகாரிபாடுகிறது. முயற்சிப்பதில்லை!

(4) வெளிநாடுகளோ, நன்கொடைகளாக, அனுப்புகின்றன.

(5) அதையும், டில்லி தடுத்து, நிபந்தனை போடுகிறது—‘கவுரவம்’ என்றபெயரால்.

இதுதானே, இன்று நமக்குத் தெளிவாகும் உண்மைகள்.

வதையும் ஆந்திரமக்களுக்கு உதவி அனுப்பினர் சோவியத்—சீன மக்கள். மனிதாபிமானத்தால் வளரும் இந்தநல்லுறவு நமக்கும் மேற்படி நாடுகளுக்குமிடையே பாசத்தை வளர்க்கும் என்று எண்ணினோம். பரிதாபம் நீங்கலாம் என எதிர்பார்த்தோம். ஏனெனில் தொடர்ந்து இதுபோன்ற உதவிகள் தந்து உதவுவதாக ரஷ்ய மக்கள் குறிப்பு காட்டியுள்ளார்கள். ஆனால், நமது ஆசையை, வீசியெறிகிறது டில்லி! இதற்கு, அது காட்டிடும் காரணம் கவுரம்’!

ரஷ்யநாடு உதவிய நன்கொடையும், சாதாரணமானதல்ல:

| | |
|---|---|
| கோதுமை | — 10,000 டன் |
| அரிசி | — 5,000 டன் |
| புட்டிப்பால் | —500,000 |
| ரூபாய் | —250,000 |
| (சீனு)ரூபாய் | —400,000 |

இவ்வளவையும், ‘கவுரவம்’ காட்டி மறுத்து, நிபந்தனை போடுகிறது இந்தியசர்க்கார்.

நல்லெண்ணத்தைத் தூசுபோல மதிக்கிறது, டில்லி.

‘நிபந்தனை’ போட்டு, இதற்கு ஒப்பினால்தான் உன் உதவியை மக்களுக்குத் தருவேன், என்கிறது,

இந்தப் பயங்கர உருவங்களின் மனோநிலையை நாம் எதற்கு ஒப்பிட முடியும்? வீதியில்விழும் நமது சகோதரர்களின் பிணங்களைக்கண்டு நாம் அழுகிறோம்! நமது அழுகுரல் கேட்டு வெளிநாடுகள். உதவ வருகின்றன!! அந்த உதவிகளை உதாசீனம் செய்கிறது, நமது தலைமைப் பீடமாக இருக்கும் அரசாங்கம். குழந்தையின குமுறல் கேட்டு ‘பிடி சோறு’ தரவந்த பெண்மணியின் தட்டைப் பிடுங்கி எரிகிறாள், மூளி அலங்காரி! நல்லதங்கையாக நமது ‘தெற்கு’ திகைக்கிறது! குழந்தைகள், கும்பி கொதிக்க, துடிக்கிறார்கள்!

நமது கையில் அதிகாரமும் ஆட்சியுமிருந்தால், இந்தக் கொடுமை நடக்கவா அனுமதிப்போம்?

வடநாட்டுப் பிடிப்பின்றி, தென்னாடு சுதந்திர பூமியாகயிருந்தால், உதவவந்த உத்தமர்களுக்கு, இவ்வித அவமானம் ஏற்பட அனுமதிக்கவா செய்வோம்?

“ரஷ்ய மாதாவே! எங்கள் குரல் கேட்டதும் உதவினாய். உன் உதவிக்கு எமதுவணக்கம். நீ, வாழ்க!” என்று தங்கத்தால் எழுதிச் செய்து, அன்புரையன்றோ, அனுப்பி வைப்போம். சீனாவின் நேசக்கரத்தைக் குலுக்கி, ஆனந்தக் கண்ணீரன்றோ, சொரிவோம்? ஆனால், இந்த டில்லி! நம்மைப் பிணைத்து வதைக்கும் டில்லி! உதவ வந்தவரை, ஒண்ட விட்டாது தடுக்கிறதே? நாம் எப்படிச் சகிப்பது, இக்காட்சியினை. சாகிறோம்! சாகாமற் செய்ய வரும் உதவியையும் தட்டுகிறது, டில்லி! “நம்மை நாமே ஆளும்” நிலையிருந்தால் இப்படித்தான் ஏற்படுமா? அலட்சியமும் அவமதிப்பும் தான் காட்டுவாரா! உதவ வந்த உத்தமர்களின் உள்ளத்தினை, குத்துவதா, இந்தக் கோணல் புத்திக்காரர்கள்? எவ்வளவு துணிவு இவர்களுக்கு! நம்மிடம் சகோதர பாசம் வைக்கும் ரஷ்யமக்களைத் துண்டிக்கத் துணிவதேன், இந்த துன்மதியாளர்கள்? எண்ணிப் பாருங்கள்! இவ்வளவு துணிவும் வீம்பும் டில்லிக்கேற்பட்டதன் காரணம் என்ன. நாம், அடிமைப் பட்டிருக்கிறோம் என்பதுதானே! அதனால்தானே, இப்படிக் கோலகலமாக நடக்கின்றனர். “என்று ஒழியும் டில்லி ஆதிபத்யம்?”—இப்படி, நாம், கேட்பது தவறு! அறிவுடையோரே—நீங்கள் கூறுங்கள். உதவ வருவோரைத் துண்டிக்கிறதே—பாச உணர்ச்சி பரவாமல் தடுக்கிறதே—இந்த டில்லி பண்டிதபத்யத்தோடா நாம் கட்டுண்டிருக்க வேண்டும்? நமது மக்கள் பிணமாகும் போதும், பித்து விளையாட்டில் ஈடுபடும், டில்லியா நம்மை ஆள்வது? ❁

## காலிகள், செயல்

தோழர்கள் சுந்தரப்பாவையும், ரவிநாராயணரெட்டியையும், கடந்த 5-ந்தேதி காலிகள் தாக்கி படுகாயம் விளைவித்ததாக அறியவருகிறோம்.

ஐதராபாத் சமஸ்தானத்திலுள்ள நீடாமானூர் எனும் கிராமத்தில் மக்கள் ஜனநாயக முன்னணி அலுவலகத்தினுள், காலிகள் பலர் புகுந்து, இந்த மோசகரமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

தாக்குதலுக்கு ஆளான இரு கம்யூனிஸ்டுத் தோழர்களும், பொறுப்புள்ள நிலையிலிருப்பவர்கள்; மக்களின் அபிமானத் தலைவர்கள். அவர்களைக் காலிகள் கூட்டம் தாக்கியது அரசியல் நோக்கமாகவே என்றும் அறிகிறோம்.

காலிகளைக் கொண்டே காலந்தள்ளலாம் என்கிற நிலைமைக்கு வந்திருக்கிற கட்சி எதுவென்பதைப் பொதுமக்கள் அறிவார்கள்.

காலித்தனமும், இரத்தம் வீணுவதும் எந்த அரசியல் கட்சியையும் வாழவைத்துவிடாது. இதை வெறித்தனத்திலீடுபட்டோர் அறிந்துகொள்ளவேண்டும்.

❁

### திருமணம்

மாயூரம்: லெட்சுமி புகைப்படநிலைய உரிமையாளர் பக்கிரிசாமியின் மைத்துனியான அலமேலு, குஞ்சமேடு தோழர் ஆசைத்தம்பியை, 7-9-52 அன்று ஆர். சம்பந்தம் எம். எல். ஏ. தலைமையில் கணவனாக ஏற்றார். மு. கருணாநிதி, எஸ். எஸ். சிவசூரியன் பேசினர்.

# பத்து கோடி

★

100.000.000
ரூபாய்கள்

*

பத்து கோடி
ரூபாய்கள்!!

*

இந்திய சர்க்கார், கடனாகத் தரப்போகிறார்களா. கூழுக்கலையும் குப்பன் ‘அன்னதானம்’ செய்வதா! என்று ஆச்சரியத்தோடு, கேட்பீர்கள். உண்மை. இது. தொழில் அபிவிருத்திக்காக, பத்து கோடி ரூபாய்களை, இந்திய சர்க்கார் கடனாகத் தரப் போகிறார்கள். யாருக்கு? எந்த மாகாணம் இந்தப் ‘பாக்யம்’ பெற்றது என்று கேட்பீர்கள்! நிச்சயமாக சென்னை மாகாணம் அல்ல. இந்திய உபகண்டத்திலிருக்கும், ஏனைய மாகாணங்களுக்கும், கூட அல்ல—இந்தக் கடன் தனிப்பட்ட கம்பெனியொன்றுக்கு!! ஆமாம், பாரதமாதாவின் திருப்புதல்வர்கள், இந்திய நாட்டையே விலைக்கு வாங்கக் கூடிய அளவுக்கு. பணத் தோட்டத்தைப் பயிரிட்டுக் கொண்டிருக்கும் டாடாவுக்கு, இவ்வளவு பெரிய தொகையைக் கடனாகத் தரப்போகிறார்களாம். ஜாம்ஷெட்பூர் சீமானுக்கு, ‘கையேந்தி வழங்கிறோம்!—என முகாரி யெழுப்பும டில்லி, கடன் தரப் போகிறது! இரும்பு—எஃகுத் தொழிலில், அபிவிருத்தி காணுவதற்காக, இந்த அளவு தொகை, கடன் தரப்படுமாம்!!

இந்தத் தகவல் வருவதற்கு இரண்டு நாட்கள் முன்னர்தான் டாடா இரும்புக் கம்பெனியின் கடந்த ஆண்டு வரவு செலவுக் கணக்கை, சரிபார்த்திருக்கிறார்கள், ஜாம்ஷெட்பூர் அதிபர்கள். கணக்கைச் சமர்பித்து, டாடாவும் பேசியிருக்கிறார்.

‘கடன் தருவோம்’ எனக் கூறுகிறதே, அந்த டாடாவின் கம்பெனியொன்றும் நஷ்டத்தில் நடக்கவில்லை. கடந்த ஆண்டில் மட்டும் 35 லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது. டாடாவுக்கிருக்கும் பல கம்பெனிகளில், இது ஒரு கம்பெனி. இங்கு மட்டும், லாபம், 35 லட்சம். இத்தகைய ‘பரிதாபமான ஏழை’க்கு பத்து கோடி, கடனும்! தொழில் அபிவிருத்திக்காம்!!

கடன் தர, ஆள் தேடி அறிவிக்கிறதே டில்லி, அந்த டாடாவின் உள்ளம் எப்பேற்பட்டது தெரியுமா? சிலர் எண்ணலாம், சர்க்கார் தரும் பணத்தால், சிறந்த நிர்வாகத் திறமை மிக்க டாடா கம்பெனியார் தொழில் நடத்தினால், எவ்வளவு தொழிலாளர்கள் ஜீவிக்க முடியும் என்பதாக! அந்த பரந்த மனோபாவம் படைத்தவரா டாடா, என்பதைப் பாருங்கள். இரும்புக் கம்பெனியின் வருடாந்திரக் கூட்டத்தில் இவ்விதம் பேசியுள்ளார்.

> “முப்பத்து ஐந்து லட்சம் தான் லாபம். நிர்வாகச் செலவு அதிகம். இதைக் குறைக்கும் எண்ணத்தினால் தான், வேலை காலியான இடங்களில் எவரையும் நியமிக்கவில்லை.

லாபம் லட்சக் கணக்கில்!

திருப்தி ஏற்படவில்லை!!

பலரை வேலையிலிருந்தும் நிறுத்தினர்!

அவர்களுடைய இடங்களில் எவரையும் நிறுத்தவில்லை!!

இத்தகைய ‘பொதுஜன விசுவாசி’க்கு, டில்லி பீடம், பத்து கோடி கடன் தருமாம். இரண்டு கோடிக்கும் மூன்று கோடிக்கும் மூக்குடைபடும், சென்னை மாகாண அமைச்சர்களே, இது என்ன காட்சி! எங்கிருந்து இந்தப் பத்து கோடி முளைக்கிறது!! பதில் கூற வேண்டாம் — சிந்தித்துப் பாருங்கள். ❁

# 'முல்கி' போராட்டம்

நாங்கள் வாட இன்னொருவன் வாழ்வதா?

இந்தக் குரல், புயலாக மாறி, அரசுகளைக் கவிழ்த்திருக்கிற நிகழ்ச்சிகள் அனந்தம். அடிமைப்பட்டுத் தவித்த நாடுகளாயினுஞ் சரி, பிறர்க்கு ஏவல் செய்த இனமாயினுஞ் சரி, எங்கெங்கு ஆள ஒருவனும் அவன் எடுபிடிகளாக மற்றொரு கூட்டமும் இருக்க நேர்ந்ததோ, அங்கெல்லாம், இந்த முழக்கம் எழும்பாமலிருக்க முடியாது! தன் கூட்டிலிருக்கும் இரையைக் கழுகு கொத்தி செல்ல புறா, எத்தனை நாட்களுக்குத்தான் ஏங்கிக் கொண்டிருக்கும்? தோட்டத்து மலரை ஆர்ப்பாட்டக்காரன் கொய்து செல்ல, அதைச் சகித்துக்கொண்டு எத்தனை நாட்களுக்குத்தான், வாளா யிருப்பான்? என்றாவது ஒருநாள், அவனது இதயம் கொதிக்கத்தான் செய்யும்! அந்த ஆவேசத்தின் வேகத்தில், மண்மேடாகிப் போன, சரிதக் கட்டிடங்கள் உண்டு. தூள் தூளாகிப் போன சாம்ராஜ்யங்கள், பலப்பல. எனினும், இன்னும், நாடு பிடிக்கும் ஆசையும், நாட்டை பிடிக்காமலே கொட்டமடிக்கும் தந்திர எண்ணமும், அழிந்தபாடில்லை; ஆங்காங்கும், தத்தமது சாகசப் போர்வையிலும், தந்திர உருவினும், பிழைத்துக் கொண்டிருக்கொண்டிருக்கிறது.

நாங்கள் வாட அவர்கள் வாழ்வ்தா?

என்கிற அதிருப்திக் குரல் முன், நல்லோரோ, பொல்லோரோ — எவராயினும்—அந்நியர் என்றால்—விளைந்திடும் நாணலர்க, தப்பித்துக் கொண்டுவிட முடியாது. இந்த உரிமைக் குரல் உந்தி விடும் ஆர்வம் பூட்டிவிட்ட அம்பாகும்! இந்த உண்மையைத்தான், கடந்த சில தினங்களுக்கு முன், ஐதராபாத்தில் நடைபெற்ற முல்கிகளின் போராட்டம் உணர்த்துகிறது. ஐதராபாத், இந்திய யூனியனில் சேர்க்கப்பட்டிருக்கும் சமஸ்தானமாகும். இந்திய யூனியனில் இணைக்கப்பட்ட பிறகு, அங்கு நிர்வாகத்துறையில் அமர்த்தபபட்டிருக்கும் அதிகாரிகளில் பலர், ஐதராபாத்தைச் சேராதவர்கள்—அந்நியர்கள். அவர்களை எதிர்த்து நடைபெற்றது தான் இக்கிளர்ச்சி! ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்த உபகண்டத்தை ஆட்டிப் படைத்த போது, எந்தெந்த முழக்கங்களை, தமது தேசிய இயக்கத்துக்காக காங்கிரசார் கையாண்டனரோ, அதே முழக்கம் அதிர்ந்திருக்கிறது, ஐதராபாத்தில்! "அந்நியனே வெளியேறு!" என்றார்கள், காங்கிரஸ் தோழர்கள். அதே முழக்கத்தைத்தான், ஐதராபாத் வாலிபர்களும், முழக்கியிருக்கிறார்கள். "என்ன அநாகரீகம் இது? யார் அந்நியர்! நாமெல்லாம் பாரதமாதாவின் மைந்தர்களன்றோ?" என்று துடிக்கலாம், தேசியத் தோழர்கள். என் செய்வது! இடியோசை போலக் கேட்கிறதே, ஐதராபாத் இளைஞர்களின் முழக்கம்.

முழக்கத்தோடு முடிந்துபோய் விடவில்லை—பெரியதொரு கிளர்ச்சியும் நடைபெற்றிருக்கிறது. கிளர்ச்சியை அடக்க, துப்பாக்கிகள் அலறியிருக்கின்றன! ஊரடங்குச் சட்டம் பாய்ந்திருக்கிறது! அது மட்டுமா?

ஏழு பேர் மரணம்

170 பேருக்கு காயம்

300 பேர் கைது

சாதாரணக் கிளர்ச்சியென்று, இதனைக் கூற முடியும்? 'சண்டிகள்' தொல்லை, சுயநலமிகள் மூட்டிய தீ, கலவரக்காரர்களின் கிளர்ச்சி—இவ்விதம், இதற்கு, பற்பல பெயர்களைச் சூட்டலாம், தேசிய ஏடுகள். ஆனால், ஐதராபாத் மண்ணிலே, குருதி வெள்ளம் ஓடியிருப்பதை மட்டும், மறந்துவிடக் கூடாது. பொது மக்களும் பொது மக்களும் மோதிக்கொண்டதால், சிந்தியது அல்ல, அந்த இரத்தம். பொது மக்களும், சர்க்காரும் மோதியதால் கொட்டியதாகும்! பொதுமக்களிடம், மாணவர்கள் மூட்டிய தீ மூலம், சிந்தியதாகும் அது. அரசியல் கட்சியினரின் 'அண்டர் கிரவுண்ட்' வேலையால், உண்டாகியது அல்ல இக்கிளர்ச்சி. மாணவர்களின் உள்ளத்திலிருந்து வெடித்ததாகும்! மாணவர்கள் துவங்கிய முழக்கம் தான், "அந்நியர்களை விரட்டு: எமக்குத்தா, வேலை" என்பது. இதிலே, மாணவர்கள் தான், இம்முழக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் என்று அறியும் போது, இந்தப் பிரச்னையில், பொதிந்துள்ள முக்கியத்துவத்தை, நாம் சிந்திக்க வேண்டும் — மூடி மறைக்க முயல்வது, விபத்தைத் தான், விளைவிக்கும். மலருஞ்சோலை யென்பர் மாணவ உலகத்தை! துன்பம் தீண்டாத, அந்தத் தூய உள்ளங்கள், தமது எதிர்காலத்தை எண்ணி, எழுச்சிகொண்டிருக்கிறார்கள். கண்ணுக்கு முன்னே தமது பூமியில் பிறர் நடமாடுவது தெரியும் போது, தமது எதிர்காலம் இருள் சூழ்வதாகத்தானே அவர்கள் எண்ணுவர். தம்மைச் சார்ந்தோர் பலர் வேலையில்லாமல் வீதிகளில் அலையும்போது, மாற்றிடங்களைச் சார்ந்தோர் புதுப் புது வேலைகளில் அமர்த்தப்படுவதை எங்ஙனம் சகிக்கமுடியும் அவர்களால்? படித்துப்பட்டம் பெற்றோர் பலரிருந்தும், "வேலை! வேலை!" என்று சர்க்கார் ஆலயத்தை நோக்கி வலம் வந்தும், அவர்களைப் புறக்கணித்து, வெளியிலிருந்து ஆட்களை இறக்குமதி செய்தால், ஐதராபாத் வாழும் மக்களின் இதயம், சகித்துக்கொண்டா இருக்க முடியும்? அதனால்தான், இக்கிளர்ச்சி, அதிவேகத்தில் உருப்பெற்றிருக்கிறது.

*

"கலெக்டர்கள் வெள்ளையராகத்தான் இருக்கவேண்டும்!"

"ஏன்?"

"இந்தியர்களை அந்தப் பொறுப்பில் அமர்த்துவது—ஆபத்து"

"என்ன நேர்ந்துவிடும்?"

"என்னவா? இந்தியாவை நாம் இழந்து விடுவோம்!',

ஆதிக்கத்தை நிலைநாட்டிய, ஆங்கிலேயர், ஆரம்ப காலத்தில், இவ்விதம்தான் உரையாடிக் கொண்டனர். முக்கிய பொறுப்புகளிலெல்லாம், தம்மவரை—அதாவது தமக்குக் கட்டுப்பட்டவரை—அதிகாரங்களில் அமர்த்தினர். காரணம், அடிமையான மக்களிடம் அவர்களுக்கு ஏற்பட்ட அச்சம்! 'எங்கே அவர்கள் நம்மை ஏமாற்றிவிடுவார்களோ' என்கிற, பேரச்சம், இந்த முறையைக் கடைப்பிடிக்கும்படிச் செய்தது. இதே அச்சத்தைத்தான், மத்திய சர்க்காரும் பெற்றார்கள்—ஐதராபாத்தை இணைத்த பிறகு. ஆதிக்கக் காரனுக்கு அரும்பவேண்டிய இந்த அச்சம், இவர்களுக்கும் ஏற்பட்டது. இதன் விளைவாக, அன்று முதல்,

தமக்குப் பிடித்தோரையே ஐதராபாத்தில், மத்திய சர்க்கார், கொண்டு போய் திணித்து வருகிறது.

இந்தக் கொடுமையைச் சகிக்காமல்தான், ஐதராபாத் மாணவர்கள், கிளர்ச்சி செய்திருக்கிறார்கள்.

அந்நியரை வெளியேற்று!

எங்களுக்கு முதலிடம் கொடு!

என்று, கர்ஜித்திருக்கிறார்கள். இந்த, இதயகீதத்தை அடக்க, காங்கிரஸ் துரைத்தனம், துப்பாக்கியைக் காட்டியிருக்கிறது! சுட்டுத் தள்ளியிருக்கிறது!! அதிகாரமாற்றத்துக்குப்பிறகு, ஐதராபாத்துக்குள், திணிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் தொகை சற்றேறக்குறைய 5000 இருக்குமாம். இவ்வளவு பேரை அங்கு 'இறக்குமதி' செய்யும் அவசியம் என்னவென்றுதான் 'முல்கி' கிளர்ச்சி, கேள்விபோடுகிறது!

படித்து, வேலைக்கு அலைவோர் தொகை ஏராளமாகவிருக்கும் போது, சின்னஞ்சிறு உத்யோக முதல் பெரிய அதிகாரிகள் பதவி வரையில், 'வெளியினர்' அமர்த்தப் படலாமா? நியாயமா? என்று, கேட்கிறார்கள். இந்த முழக்கத்தை எவரே அலட்சியம் செய்துவிட முடியும்! வெள்ளைக்காரன் தனது ஆதிக்கத்தை ஸ்தாபிக்கச் செய்த, அதே முயற்சிகளிலா, சுயராஜ்ய வீரர்களும் இறங்குவது? ஒரே நாடு —என்று தேன்சொட்டப் பேசும் திருவாளர்களுக்கா, இந்தப் பேதமதி ஏற்படுவது! தம்முடன் ஐக்கியமாக்கிக்கொள்ள, மக்களின் ஒப்புதல் முக்கியமா அல்லது கையிலிருக்கும் அதிகாரமே போதுமா, என்கிற விஷயத்தைக்கூட விளங்கிக் கொள்ளவில்லை, டில்லியினர். ஆதிக்க ஆசை கண்ணையும் கருத்தையும் மறைத்துவிட்டதுபோலும்!

*

"முல்கி" போராட்டம், ஒவ்வொரு வட்டாரத்திலும் வாழும் மக்களும், எவ்விதம் தமது உரிமைகளைக் காத்துக்கொள்ள போராடுவார்கள் என்பதை உணர்த்துகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்க முடியாத ஆட்சிப் பாதையை வைத்துக்கொண்டிருக்கும் டில்லியினர், இவைகளுக்கெல்லாம், பரிகாரம் தேடித்தரவே முடியாது. எல்லா இடங்களையும் தமது குடைக்கீழ்வைத்திருக்கவேண்டும்—அதற்கான சகல தந்திர சாகச முறைகளையும் கையாளவேண்டும்—என்கிற ஆசையைமட்டும், வைத்துக் கொண்டு, காலந்தள்ள எண்ணும், டில்லி, எவ்விதம் இந்தப் போராட்டங்களை சமாளிக்கமுடியும்? முடியாது! முடியவே முடியாது!! 'நான் படுகிற கஷ்டத்தில் நீயும் பங்கேற்கவா' என்று அழைப்பது போன்றே, அந்தந்த வட்டாரங்களுக்கும், துன்பங்களையும் தொல்லைகளையும் ஒரேநாடு என்கிற பெயரால் பரப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிக்குக் கிடைத்த முதல் அடிதான் 'முல்கி' போராட்டம்! ஐதராபாத் இந்திய யூனியனுக்குள்சேர்க்கப்பட்டபிறகு, ஏராளமானோர், அங்கு சென்று வாழ ஆரம்பித்திருக்கிறார்கள்—வாழ்வது மட்டுமல்ல. அங்கு வாழும் மக்களின் நலன்களைச் சுரண்டவும் துவங்கியிருக்கிறார்கள். இதை, 'வாழத் தவிப்போர்' எப்படிச் சகிப்பர்? தன் கூண்டிலே கிடக்கும் குஞ்சுகளுக்கென கொஞ்ச நஞ்சம் இருக்கும்

2-ம் பக்கம் பார்க்க

## தேனீ வழக்கு

தேனீ கலவர வழக்கு, மதுரை அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் அவர்களின் பெரியகுளம் முகாமில் 5–9–52ல் நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்டோரில் இருவர் தவிர, என். ஆர். தியாகராசன் கே. சக்திவடிவேல் கவுண்டர் M P. உட்பட எல்லோரும் வந்திருந்தனர். வராதவர்களான, முன்னாள் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஏ.வி. ராமசாமிராஜா உட்பட இரண்டு பேருக்கும்வாரண்ட் அனுப்பப்பட்டது. 19–9–52 தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாய்தாவுக்கு முன்னாள் தேனீ நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், அன்று நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்று மறுப்பு நோட்டீஸ் கொடுத்தவருமான தோழர் வி. வி. குருசாமி நாய்க்கர் உட்பட 6 சாட்சிகளுக்கு சம்மன் அனுப்பப்பட்டது. மேற்படி ஆறு சாட்சிகளையும் அன்று விசாரிக்கப்படும்.

★

## செய்திகள்

ஒரத்தநாடு: 7—9—52-ல் தி. மு. க. சார்பில் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி பேசினார்

சென்னை 24—8—52-ல் மெமோரியல் ஹாலில் நடைபெற்ற தோழமைக் கழக நூல் நிலையத் திறப்பு விழாவில் சொற்பொழி வாற்றிய தோழர் இரா. நெடுஞ்செழியன்வசம் தேனீ வழக்கு நிதிக்காக ரூ. 150 ஒப்படைக்கப்பட்டது. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி தலைமை வகித்தார். தோழர் அ. பொன்னம்பலனார் கலந்துகொண்டார்.

அரியலூர்: 19—8—52—சோளமூட்டை வினியோக ஊழலைக் கண்டித்து தி. மு. க. செயலாளர் செல்லப்பா தலைமையில் தோழர்கள் சின்னச்சாமி (தி. க.) சீனிவாசன் (கம்) பேசினர்.

அரிமழம்: தி. மு. க. பொதுக் கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத். ஜி. பராங்குசம், இளஞ்சோழன் சொற்பொழிவாற்றினர்.

மணப்பாறை, குளித்தலை, காளாப்பூர், காரைக்குடி, நடுப்பட்டி, பன்னுங்கொம்பு, ஆகிய ஊர்களில் முறையே 24, 25, 27, 28: 29, 30—8—52 ஆகிய தேதிகளில் தோழர் இளமுருகனார், தோழியர் பூங்கோதை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

### அரக்கோணத்தில்!

அரக்கோணம் கூட்டுறவு ஸ்டோர் நிர்வாக விவகாரம் சம்பந்தமாகவும், அதன் தலைவர் பக்தவச்சலு நாயுடு எம். எல். ஏ. குறித்தும், 5–9–52ல் கூடிய ஐ. ஜ. முன்னணிக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பியிருப்பதாக செயலாளர் இலட்சியவாதி அறிவிக்கிறார்.

★

### சேலம் மாவட்டத் தோழர்களுக்கு

மாவட்டக் கழகத்துக்குத் தேர்தெடுத்திருக்கும் கிளைக் கழகப் பிரதிநிதிகளின் முகவரிகளை உடனே கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்:— ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர், மா தி. மு. க., சேலம்.

★

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.